**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC), பொள்ளாச்சி**

2022ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 02 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
**இ.ம.எண்.03/2022 இன் அ.வ.எண்.193/2022**

ஆனைமலை தாலூக்கா, சுப்பேகவுன்டன்புதுார், என்கிற விலாசத்தில் வசித்து வரும் இந்து, திரு.குணசேகரன் மனைவி சுமார் 62 வயதுள்ள திருமதி.செல்வநாயகம்.

... மனுதாரர் / 2ம் வாதி

/ எதிர் /

1. ஆனைமலை தாலூக்கா, ஆழியார் அஞ்சல், நெல்லிதுரை மன்னம், தியாகி காலனி அருகில், தோட்டத்து சாளை, என்கிற விலாசத்தில் வசித்து வரும் இந்து லேட்.கந்தசாமி கவுண்டர் மகன் சுமார் 52 வயதுள்ள திரு.K.வாசுதேவன்.

2. ஆனைமலை தாலூக்கா, கோட்டூர் மலையாண்டிபட்டிணம், காமராஜர் சாலை, என்கிற விலாசத்தில் வசித்து வரும் இந்து, திரு.காளியப்ப கவுண்டர் மகன் சுமார் 68 வயதுள்ள திரு.K.குமாரசாமி.

3. ஆனைமலை தாலூக்கா, ஆழியார் அஞ்சல், வெள்ளிதுரை மன்னம், தோட்டத்து சாளை, S.F.No.1354, என்கிற விலாசத்தில் வசித்து வரும் இந்து, திரு.தண்டபாணி மனைவி சுமார் 48 வயதுள்ள திருமதி.பாலாமணி.

.... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

நீதிமன்ற ஆணையரை நியமித்து தாலூக்கா நில அளவையர் உதவியுடன் மனுச்சொத்துக்களின் பௌதீக தன்மையை பார்வையிட்டு, மனுதாரரின் சொத்தினையும், எதிர்மனுதாரரின் சொத்தினையும் அளவை செய்து எல்கைகளை நிர்ணயம் செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 23.08.2022

இம்மனுவானது கடந்த 17.11.2022 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.P.சண்முகம் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரரே முன்னிலையாகியும், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ள நிலையிலும், மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

## இறுதி உத்தரவு

| | |
|---|---|
| 1. | முடிவில், வழக்கறிஞர் **திரு.P.B.குமார் MS.No.897/2000** என்பவர் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்பட்டு மேற்படி நீதிமன்ற ஆணையர் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களின் சொத்தை தகுதி வாய்ந்த தாலூக்கா நில அளவையர் உதவியுடன் இருதரப்பினருக்கும் அறிவிப்பு கொடுத்து அளந்து, அதன் பௌதீக தன்மையை பொறுத்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும், நீதிமன்ற ஆணையரின் ஊதியம் ரூ.5,000/- என நிர்ணயம் செய்யப்பட்டு மேற்படி, தொகையானது மனுதாரர் தரப்பில் நீதிமன்ற ஆணையருக்கு வரும் 19.12.2022 அன்றோ அல்லது அதற்கு முன்போ நேரடியாக செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை. அழைக்க: 19.12.2022. |

## DESCRIPTION OF PROPERTY

**"ஏ" ஷெட்யூல் :-**

கோயமுத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆனைமலை சார்பதிவு

அலுவலகம், கோட்டூர் கிராமம், க.ச.எண்.1354/B காலை பு.ஏ.11.93 இதில் வாய்க்காலுக்கும் மேற்கு, இட்டேரிக்கும் கிழக்கு, க.ச.எண்.1352 காலைக்கும் தெற்கு, குமாரசாமி வகையறா பங்கு பூமிக்கும் வடக்கு, இதன் மத்தியில் பு.ஏ.8.05.

**"பி" ஷெட்யூல் :–**

கோயமுத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆனைமலை சார்பதிவு அலுவலகம், கோட்டூர் கிராமம், க.ச.எண்.1354/B காலை பு.ஹெக்.4.82.5 இதற்கு பு.ஏ.11.93,

ஷை க.ச.1354B நெ.காலையில் குமாரசாமி
கவுண்டர் வகையறாப் பேர்களின் பூமிக்கும் ..... வடக்கு,

ஷை காலையில் எங்களுக்கு பாத்தியப்பட்ட
மீதமுள்ள பூமிகளுக்கும் ..... தெற்கு,

ஷை க.ச.1354/B நெ. காலையில் நாங்கள்
தடத்திற்காக கிழமேல் சுமார் 50 மீட்டர் நீளத்திலும்,
தென்வடல் சுமார் 6 மீட்டர் அகலத்திலும்
கிழமேலாக விட்டுள்ள வண்டித்தடத்திற்கும்,
எங்களுக்கு பாத்தியப்பட்ட மீதமுள்ள பூமிக்கும் ..... கிழக்கு,

க.ச.1349 நெ.காலை வாய்க்காலுக்கும்,
க.ச.1354/A நெ. காலையில் உள்ள பூமிக்கும் .... மேற்கு,

இதன் மத்தியில் பு.ஏ.3.00 செ.க்கு பு.ஹெக்.1.21.5 ஏர்ஸ்.

**"சி" ஷெட்யூல் :–**

கோயமுத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆனைமலை சார்பதிவு அலுவலகம், கோட்டூர் கிராமம், பட்டா எண்.1258, க.ச.எண்.1354/B பு.ஹெக்.4.82.5 இதற்கு பு.ஏ.11.93, இதில் பு.ஏ.5.05, இதற்கு செக்குபந்தி, வாதிகளின் வேறு பூமிக்கும் தெற்கு, பி.டபிள்யூ வாய்க்காலுக்கும், பாலாமணி பூமிக்கும் மேற்கு, வாசுதேவன், குமாரசாமி, பாலாமணி பூமிக்கும் வடக்கு, அரசு புறம்போக்கு இடத்திற்கும் கிழக்கு.

இவ்வுத்தரவு 2022ம் வருடம் டிசம்பர் மாதம் 02ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒப்பம்/-(N.பாரதிராஜன்)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
பொள்ளாச்சி.

---

**இறுதி உத்தரவு**
ஐ.ஏ.03/2022 இன் ஓ.எஸ்.193/2022
நாள் : 02.12.2022
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

---